

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் பெண்கள் தின விழா நடந்தது.

# மார்த்தாண்டம் கல்லூரியில் பெண்கள் தின விழா

மார்த்தாண்டம், மார்ச் 11-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் பெண்கள் தின விழாவையொட்டி நடந்த நிகழ்ச்சிக்கு முதல்வர் பால்ராஜ் தலைமை வகித்தார். கல்லூரி சிற்றாலய போதகர் ராஜலிங் ஜெயம் இறைவேண்டல் செய்தார். பெண்கள் குழு ஒருங்கிணைப்பாளர் ஜினிலா வரவேற்றார். தாளாளர் ஜெயச்சந்திரன், சுந்தரவல்லி ஆகியோர் பேசினர். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் நடந்தது. பெண்கள் குழு துணை ஒருங்கிணைப்பாளர் கனிதா நன்றி கூறினார்.